## பத்திரிகை அறிக்கை

**இலங்கை மற்றும் தெற்காசியாவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லா சிறுவர்களுக்குமான உரிமையினை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பது பற்றிக் கலந்துரையாடுகின்றனர்.**

**கொழும்பு,** 2 செப்டெம்பர் 2019 – ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துடன் சேர்ந்து இலங்கைப் பாராளுமன்றம் சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தின் 30 வது வருடப் பூர்த்தியினைக் கொண்டாடுவதற்காக தெற்காசியாவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை வரவேற்கின்றது.

கூட்டத்தில் பிராந்தியத்தில் சிறுவர்களின் நிலை பற்றிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்திற்கொண்டு மேலதிக முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துவதற்காகச் எல்லா சிறுவர்களினதும் எல்லா உரிமைகளையும் அடைந்துகொள்வது தொடர்பான பிரதான சவால்களைக் கலந்துரையாடுவர்.

செப்டெம்பர் 2 முதல் 3 வரை கொழும்பில் நடைபெறும் சிறுவர்களுக்கான தெற்காசியப் பாராளுமன்றத் தளம் சிறார் உரிமைகளை அடைந்துகொள்வதற்காகத் தேசிய நிகழ்ச்சிநிரலை முன்னோக்கி நகர்த்துவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பை வழங்கும்.

“சமவாயம; சிறந்த நிலைமைக்காகச் சிறுவர்களின் வாழ்க்கையினை நிலைமாற்றுவதற்கு உதவியுள்ளதுடன் அதிகமான சிறுவர்கள் செழித்தோங்குவதற்கும் சிறந்ததும் பாதுகாக்கப்பட்டதுமான பிள்ளைப் பராயத்தினைக் கொண்டிருப்பதற்கும் அரசாங்கங்கள் சாதகமான கொள்கைகளையும் மாற்றப்பட்ட சட்டங்களைக் கொண்டுள்ளதுடன் முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும் சமவாயம் அனைத்து இடங்களிலும் இன்னும் பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை. மேலும் பல இலட்சக்கணக்கான சிறுவர்களுக்கான போதிய சுகாதாராப் பராமரிப்பும் போசாக்கும் கல்வியும் வன்முறையில் இருந்து பாதுகாப்பும் மறுக்கப்படுகையில் அவர்கள் தொடர்ந்தும் தமது உரிமைகள் மீறப்படுகின்றமையால் வருந்துகின்றனர்” என UNICEF இன் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் Ms.ஜீன் கோவ் குறிப்பிட்டார்.

சிறுவர்களின் சூழ்நிலையைப் பற்றிக் கலந்துரையாடுவதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களை இணைப்பதற்காகவும் சிறுவர்களின் வாழ்வை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதற்காக அவர்களைத் தூண்டுவதற்காகவும் பிராந்தியத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் UNICEF கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யும் மூன்றாவது வருடம் இதுவாகும்.

இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கரு ஜயசூரிய பின்வருமாறு குறிப்பிட்டார்: “தெற்காசிய ஜனத்தொகையில் 36 சதவீதமாக இருக்கின்ற எமது சிறுவர்களைப் பற்றி நாம் எவ்வளவு சிறப்பாகக் கவனம் எடுக்கின்றோம் என்பதிலேயே தெற்காசியாவின் எதிர்காலம் தங்கியுள்ளது. சிறுவர்களுக்கான தெற்காசியப் பாராளுமன்றத் தளத்தின் கலந்துரையாடல்களில் இருந்து எழும் கொழும்புப் பிரகடனம் எமது சிறுவர்கள் அவர்களின் அனைத்து உரிமைகளையும் பூர்த்திசெய்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்காகக் கொள்கை வகுப்போரின்

கடப்பாட்டைப் புதுப்பிக்கும் என்றும் அது 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை அவர்கள் எதிர்கொள்ள அவர்களை வலுவூட்டும் என்றும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்”.

சிறார் உரிமை பற்றிய சமவாயமே மிகப் பரவலாக ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் ஒப்பந்தமாகும். முப்பது வருடங்கள் கடந்த நிலையில் சிறார் உரிமைகள் மாற்றமடையவில்லை. ஆனால் 627 மில்லியன் தெற்காசியச் சிறுவர்களின் பிள்ளைப் பராயம் மாறியுள்ளதுடன் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இணையத்தின் வருகையுடனும் காலநிலை மாற்ற விளைவுகளுடனும் துரித நகரமயமாக்கத்துடனும் உருவாகிவரும் ஏனைய பிரச்சினைகளுடனும் சவால்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

“சிறுவர்களுக்குப் புதிய அச்சுறுத்தல்கள் காணப்படுவதை நாம் இப்போது காண்கின்றோம். ஆனால் சிறுவர்கள் அவர்களின் உரிமைகளை அடைந்துகொள்வதற்கான புதிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. அதனால்தான் பிராந்தியத்தினூடு ஆரோக்கியமான மற்றும் கற்ற இளம் பரம்பரையை உறுதிப்படுத்துவதற்காகச் சிறுவர்களுக்கான சாதகமான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துகின்றோம் என்பதை உறுதிப்படுத்துவதற்காகத் தெற்காசியா முழுவதையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதையிட்டு நாம் திருப்பதியடைகின்றோம் என ஜீன் கோவ் குறிப்பிட்டார்.

**ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினைப் பற்றி**

உலகின் மிகவும் அனுகூலம் கிட்டாத சிறுவர்களைச் சென்றடைவதற்காக உலகின் மிகவும் கடினமான இடங்களில் UNICEF பணியாற்றுகின்றது. 190 நாடுகளிலும் பிராந்தியங்களிலும் அனைவருக்கும் சிறந்த உலகினைக் கட்டியெழுப்புவதற்காக நாம் அனைத்து இடங்களிலும் ஒவ்வொரு பிள்ளையுடனும் பணியாற்றுகின்றோம். UNICEF மற்றும் சிறுவர்களுக்கான அதன் பணிகள் பற்றிய மேலதிக தகவல்களுக்காக www.unicef.org எனும் இணையத்தளத்திற்கு விஜயம் செய்யவும்

மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து தொடர்புகொள்க:

ஆன் சோபி பொனிபெல்ட், UNICEF, தெற்காசியா abonefeld@unicef.org +977 9801030076

சுசான் வூஸ்டர், UNICEF, இலங்கை swooster@unicef.org +94 77 316 5378